| O.S.No. 118/2025 | PW1: திரு. ஆறுமுகம்<br>த/பெ. திரு. கிஷ்டப்பிள்ளை | 24-02-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. பிரதிவாதி விவசாயம் செய்கிறார். அவருக்கு சொந்தமாக 10 ஏக்கர் நிலம் உள்ளது. பிரதிவாதிக்கு 4 ஏக்கர்தான் சொந்தமாக நிலம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் 4 ஏக்கர் நிலம் உள்ளது. நான் விவசாயம் செய்கிறேன். நான் உத்திரமேரூரில் 3 வருடம் இருந்தேன். எனக்கு கொடுக்கல் வாங்கல் எதுவும் இல்லை. உத்திரமேரூரில் மிச்சர் கடையில் வேலை செய்தேன். நான் ஊரில் 10 நபர்களுக்கு மேல் கடன் கொடுத்து லாவோதயம் செய்து வருகிறேன் என்றால் இல்லை.

2. என்னிடம் பிரதிவாதி 2, 3 ஆண்டுகளுக்கு முன்னர் கடன் கேட்டார், நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொல்லி உத்திரமேரூரை சேர்ந்த குணா என்பவரிடம் வாங்கி பணம் கொடுத்தேன். என்னிடம் ரூ.3½ வட்டி என்று சொல்லி குணா பணம் கொடுத்தார். 3 வருடத்தில் வட்டி எதுவும் தரவில்லை. எனக்கு ரூ.3 வீதம் பிரதிவாதி வட்டி கொடுத்துள்ளார் என்றால் இல்லை. குணாவிடம் ரூ.3½ லட்சம் வாங்கி என்னிடம் இருந்த ரூ.4½ லட்சம் சேர்த்து ரூ. 8 லட்சம் பிரதிவாதியிடம் கொடுத்தேன். முதல் தவணையாக ரூ.3½ லட்சமும், இரண்டாவது தவணையாக ரூ.1½ லட்சம் ஆலந்தூர் ஸ்டேட் பேங்க்கிலும் வைத்து கொடுத்தேன். முதல் தவணைக்கும், இரண்டாவது தவணைக்கும் சுமார் 20 நாள் இடைவெளி இருக்கும். மூன்றாது தவணையாக ரூ.3 லட்சம் பிரதிவாதியின் வீட்டில் கொடுத்தேன். அந்த பணத்தை 10 நாளில் தருகிறேன் என்று சொன்னார், ஆனால் தரவில்லை. அதனால் ஊரில் பஞ்சாயத்து பேசி பிரதிவாதி பாண்டு எழுதிக்கொடுத்தார்.

3. அந்த பஞ்சாயத்தில் கிருஷ்ணமூர்த்தி, தனமேஜெயம், தாந்தோணி, சேகர் இருந்தனர். பாண்டு எழுதும்போது பணம் எதுவும் கொடுக்கவில்லை. ஏற்கனவே கொடுத்த பணத்திற்குத்தான் பாண்டு எழுதப்பட்டது. ரூ.1 லட்சம் பிரதிவாதியின் மனைவி வங்கி கணக்கிற்கு அனுப்பினேன், மீதமுள்ள தொகையை பணமாக கொடுத்தேன். பிரதிவாதி 23.11.2022-ல் ரூ.8 லட்சம் கொடுத்தார். 3 ரூபாய் வட்டி பேசப்பட்டது, ஆனால் பாண்டில் 2 ரூபாய் வட்டி எழுதினோம். பிரதிவாதி 3 ரூபாய் வட்டி வீதம் இரண்டு ஆண்டிற்கு எனக்கு வட்டி செலுத்தியுள்ளார் என்றால் இல்லை.

4. வா.சா.ஆ.2-ல் பிரதிவாதி கொடுத்தது போக மீதி தொகை எவ்வளவு என்று குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி செல்லு எதுவும் வைக்கவில்லை. அவரது மகன் செல்லு வைத்தார். 23.11.2022-ல் பிரதிவாதி எனக்கு மொத்த தொகையையும் அசல் வட்டியுடன் செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. 03.01.2017-ல் பிரதிவாதி எனக்கு பாண்டு எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் ஞாபகமில்லை. 03.01.2017-ல் பிரதிவாதி என்னிடம் பணம் ரூ.8 லட்சம் வாங்கிக்கொண்டு பாண்டு எழுதிக்கொடுத்தார் என்றால் இல்லை.

5. பிரதிவாதியின் மகன் மணிகண்டனுக்கு 30 வயது இருக்கும். என்னிடம் பணம் கொடுத்தது அனைத்தும் பிரதிவாதிதான் என்றால் இல்லை. நான் மணிகண்டனை மிரட்டி பாண்டில் ஒரு கையெழுத்து வாங்கிக்கொண்டேன் என்றால் இல்லை. மணிகண்டன் எழுதிக்கொடுத்த ஆவணம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. செல்லு வைக்கும்போது தனமேஜெயம், கிருஷ்ணமூர்த்தி, ரவி, அருள் ஆகியோர் இருந்தனர்.

6. பிரதிவாதியின் மகனிடம் கையெழுத்து வாங்கியது குறித்து பிரதிவாதியிடம் கேட்டதற்கு எதோவொரு வேகத்தில் வாங்கிவிட்டோம் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கு பிறகு பிரதிவாதி பஞ்சாயத்தினரடம் போய் கேட்டதற்கு நான் நடவடிக்கை எதுவும் எடுக்கமாட்டேன் என சொன்னேன் என்றால் சரியல்ல. தாவா பாண்டு காலம் கடந்தவொன்று என்றாலும், அதனால் என்னுடைய வழக்கு பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.24 11:29:53 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**